6926

உ

ஸ்ரீராமஜயம்

ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள்

கீர்த்தந மாலை

மூன்றாம் பாகம்

(ஸாஹித்யங்கள் மட்டும்)

ப்ரஹ்மஞாந ப்ரசுராலயம்

அடையார், சென்னை

1940

கலாக்ஷேத்திரத்தின் ஆதரவில்

பிரசுரிக்கப்பட்டது

கலாக்ஷேத்திரம், அடையார், மதருஸ்

THE MADURA TAMILSANGAM

ஸ்ரீராமஜயம்

ப்ரஹ்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள்

கீர்த்தந மாலை

மூன்றாம் பாகம்

(ஸாஹித்யங்கள் மட்டும்)

ப்ரஹ்மஜ்ஞாந ப்ரசுராலயம்
அடையார், சென்னை
1940

சிட்டா ஸ்வரம்

மா-தா-நீ-தாமாகாரி ஸா-ரீ-நீ-ஸாதாநீஸ
மகம ஸரிஸமக மதமகமகரிஸ
ரிஸகரிமகதம கமதநிதா-க
மதகமதநிமத நிஸ்தநி ர்நிதம
கமதநீ-தமக மநிதநிஸ்ா—நி
ஸ்ஸ்நிதா-ஸ்நித தநிமதநிஸ் ம்ா-
-க்ரிஸ் ஸ்ாநித மமதநித மகரிஸ (மா)

சரணம்

கந்தனே கலியு கந்தனில் இருகண்
கண்ட தெய்வமென எண்டிசை புகழும்
செந்திலாதிபசி றந்தவேலணியும்
சேவல அமரர் காவல ஷண்முக

சிட்டாஸ்வர ஸாஹித்யம்

மா-தா-நீ-தந்தை நீயென்
ஆ-தா-ரம்-வேறிங்கில்லை

மரணபயமும் மறுபடியும் கருவடைந்தோர்
உருவொடுவரும் வெம்பிறவி பயமும்
மநமறிந்தறிந்து நான் திநம் திநம் புரிந்திடும்
வினைவரும் கொடும் நரகபயமும்
மநமெனுங் கபியின் அவதியுமற ஆண்-
டருளும் ஆண்டவனே ராமதாஸன் தொழும் (மா)

பரமசிவ ஸ்துதிகள்

2. ராகம் பிலஹரி—தாளம் ஆதி

பல்லவி

ஐயா நின் அடைக்கலமே - அம்பிகைபாக (ஐயா)

அநுபல்லவி

மெய்யாய் உன்னை பஜிக்கும் துய்யோருள்ளத்திருக்கும்
மெய்யா அஞ்சலென்றருட் கையா கைலையமர்ந்த (ஐயா)

சரணம்

* தேவர்கட்குயர் தேவனே ஹரனே - விரியுஞ் சராசரம்
யாவுமீன்ற தயாள சங்கரனே
தேவதேவ க்ருபாகர மிளிர்திங்கள்சூடிய சேகர விதி
ஏவும் வெவ்வினையாகரன் எனை என்றுகொள் பவஸாகரத்திருந் (தையா)

---

3. ராகம் பரசு—தாளம் ஆதி

பல்லவி

ஓ சிவபரம் பொருளே - நீயே துணை (ஓ)

அநுபல்லவி

ஈசா அடியார்மனப் பாசமறுத்து பவம்
எனும் கடலிலிருந்து கரைசேர்க்கும் அண்ணலே (ஓ)

சரணம்

தாவி உயரத்தூக்கும் சைலமசைய அஞ்சும்
தாயும் மநங்குளிர ஸாமகாநம் புரிந்த
ராவணனை வதைத்த ராமனும் பணிந்து - நிர்
மாணஞ் செய்தபாவந ராமலிங்கமே ஐய (கோ)

---

4. ராகம் காமவர்தநி—தாளம் ரூபகம்

பல்லவி

நின்னருள் இயம்பலாகுமோ - ஓ தேவா தேவா (நின்)

அநுபல்லவி

பொன்னி நாதன் பூவில் வந்தோன்
போற்றுங்கமலப் பூங்கழலோய்
மன்னும் ஆகமமறைகள் புகழ
மாட்டா அருள் நாட்ட முடையோய் (நின்)

சரணம்

இன்னல் கூட்டி இன்பம் ஊட்டி
இந்த்ரஜால வித்தை காட்டி
தன்னை நம்பினோரை வீட்டில்
ஸதாநந்த முழுக் காட்டும் (நின்)

---

5. ராகம் சங்கராபரணம்—தாளம் ஆதி

பல்லவி

பதி பதம் பணி வது நமது கடன்
பவமெனும் கொடும் வெயிலற நிழல்தரும் பசு (பதி)

அநுபல்லவி

துதிசெயும் அடியார் கதியெனும் கருணை -
நிதிவிதியும் ரமா பதியுந்தொழும் உமா - (பதி)

சரணம்

அந்நமய கோச உடலெனும் கூண்டில்
மன்னும் உயிர்ப்பறவை தன்னைக் குறிவைத்து
தென்னவனெனும் வேடன் தருணம் பார்த்திருக்கின்ருன்
இன்னல் சூழும் மின்னல் வாழ்வு முடியுமுன் (பதி)

---

6. ராகம் கமாஸ்—தாளம் ஆதி

பல்லவி

தாயுமானவனே — தந்தையும் (தாயும்)

அநுபல்லவி

ஆயும் மறைகளும் மாயனுடையனும்
அடிமுடி தொடர்வரும்
* அரு ளுரு வொடு
திரி சிர கிரி
தனில் வளர் திருத் (தாயும்)

சரணம்

தனக்குயர் வொப்பில்லையென் றனைத்துலகுணர்த்தவோ
தனையடைவோர்க்குத் தரும் பதத்தள வுணர்த்தவோ
மனத்திற் கெட்டாத வுயர் மலைத்தலை வீற்றிருப்ப
மண்ணில்—* அன்றைக் கோர் கதியற்ற
கன்றுப் பருவ முற்ற
பன்றிக் குருளை கட்கும் (தாயும்)

---

7. ராகம் நாதநாமக்ரிய—தாளம் ஆதி

பல்லவி

சங்கரனை பஜிப்பாய் மனமே
திநமே
ஸதா
ஸாம்ப } சிவ- (சங்கர)

அநுபல்லவி

பொங்கரவம் அணி- கங்கணனே உமை
பங்கனே அன்பர்க்கி- ரங்கும் தயாகர (சங்கர)

சரணங்கள்

1. கங்கையுடன் இளந்—திங்களணிந்திடும்
எங்கும் நிறைந்தநம்—மங்கள மூர்த்தியை (சங்கர)

2. இம்மையி லின்பமொடம்மையிலுந் தரும்
தம்மை பஜித்திடின் நம்மையு மாண்டருள் (சங்கர)

---

8. ராகம் ஸிந்துபைரவி—தாளம் ஆதி

பல்லவி

ஈசன் காண்மினோ- ஜக (தீசன்)

அநுபல்லவி

மோசம் மிகுபவ-பாசந்தரும் அருள்
லேசம் இலன் நட-ராசன் எனினும் என் (ஈசன்)

சரணங்கள்

1. லச்சைதுறந்துழல் பிச்சை உமையெனும்
பச்சைக்குமரியின் இச்சைக் கணவனென் (ஈசன்)
2. தஞ்சம் எனஅழக் கொஞ்சம் தயவிலன்
நெஞ்சந்தனில்கொடும் நஞ்சம் மிளிர்கள (வீசன்)
3. விள்ளும் அடியர்தம் உள்ளம் நிறைபொருள்
கொள்ளை கொளும்பெரும் கள்ளன் சிறுமதி (யீசன்)

---

9. ராகம் சுருட்டி—தாளம் ஆதி

பல்லவி

சிவபெருமான் க்ருபைவேண்டும்—அவன்
திருவடி பெறவேண்டும்—வேறென்ன வேண்டும் (சிவ)

அநுபல்லவி

அவலப்பிறப்பொழியவேண்டும்—அதற்கு வித்தாம்
அவமாயை அகலவேண்டும்—வேறென்ன வேண்டும் (சிவ)

சரணங்கள்

1. தொல்லுலகில் நரரும் எல்லாவுயிரும் சாந்த
ஸுகவாழ்வு வாழவேண்டும்—வேறென்ன வேண்டும் (சிவ)

2. காமம்முதல் பகையும் குரங்குமநமும் செத்து
ராமதாஸன் உய்யவேண்டும்—வேறென்ன வேண்டும் (சிவ)

ராகம் ஹமீர்கல்யாணி—தாளம் ரூபகம்

பல்லவி

நாதன் தாள் துணை -
நம்மையெல்லாம் காக்கும்—நடமிடத்தூக்கும் (நாதன்)

அநுபல்லவி

மாதா பார்வதி மால்மற்றோர்துதி
முறையிட உண்ட கறைவிடக் கண்ட (நாதன்)

சரணம்

அனைதந்தை குருவெனும் இம்மூவர்கண்
கண்ட கடவுளர்- அவர்
மநம்வருந்தப் புன்னெறிபுகுவது
நரகளித்து விடும்
வினையுடல் மக்கள் மனைவியர் சுற்றர்
வினையற அகல்வர்
வீண்மநப்பற்று பிறவிக்கே வித்து
மெய்யுணர்ந்தகற்று
மின்னல் வாழ்நாள் இன்னல் காணுய்
வெள்ளி மலைவளர் வள்ளல் மலைமகள் (நாதன்)

உமாதேவி ஸ்துதிகள்

11. ராகம் ஸாவேரி—தாளம் ஆதி

(ஸம்ஸ்க்ருதம்)

பல்லவி

சாமுண்டேஶ்வரி ஶங்கரி -
சந்த்ர சூட ஸஹசரி கருணாகரி (சாமுண்)

அநுபல்லவி

ஸ்ரீ முண்டகாத்யுபநிஷத் ப்ரதிபா -
தித வித்யா ரூபிணி சித்ரூபிணி
க்ஷேமங்கர ஶய கர ஸரோஜிநி
* ஸ்ரீகர நவராத்ரி மஹோத்ஸவகோ
லாஹல மிளித புவநப்ரஸாதிநி (சாமுண்)

சரணம்

ஶ்யாமளே மஹீஸூர புரவாஸிநி
ஶ்யாமக்ருஷ்ண பகிநி மந்தஹாஸிநி

கோமளாங்கி புக்தி முக்தி தாயினி
குபதிநுதே ஸ்ரீநுதேநபாயினி
காம மதாத் யரிகுலார்திதம் மாம்
காத்யாயனி பாஹி பக்த பாலினி
ராமதாஸ வந்திதே ஸுரஹிதே
ராகாஶஶிவதநே ஸுமஹிதே
* ரக்ஷித நிஜ பக்தஜந ஸமூஹே
ராஜிதேக்ஷு பாணஸந பாஹே
யக்ஷராஜவிநுதே ஹரி வாஹே
யமிஜந நிர்மலமாநஸ கேஹே (சாமுண்)

---

12. ராகம் லதாங்கி—தாளம் ரூபகம்

பல்லவி

ஸ்ரீ ஜகதம்பிகையே தீநதயாபரி சங்கரி (ஸ்ரீ)

அநுபல்லவி

ஓ ஜநநி நீயே அபயம் சரணுன் உபய சரணம் (ஸ்ரீ)

சரணம்

பார்தனில் பொருளும் உறவும்
பந்த உடலும் ஶாஶ்வதமோ
யார் துணை என்—அம்
பா எனைக்கண்பார் பகவதி (ஸ்ரீ)

---

13. ராகம் கானட—தாளம் ஆதி

பல்லவி

மாதா துணை புரிவாய் — ஸ்ரீ ஜகந் (மாதா)

அநுபல்லவி

மாதவஸோதரி மலையரசன் குமாரி
பாதம் மறவேனம்ப பார்வதி சங்கரி (மாதா)

சரணம்

எத்தனை துன்பங்கள் வந்தாலும் நின்
இன்பத் திருநாமம் சொல்லித் துதிக்கவும்
எத்தனை இன்பங்கள் நேர்ந்தாலும் என்
இதயமுன் பூஜையை மறவாதிருக்கவும் (மாதா)

நடராஜ ஸ்துதிகள்

14. ராகம் கேதாரம்—தாளம் ரூபகம்

பல்லவி

ஸகல புவந நாயக — நின்
தாள்பணிந்த என் றன்னைக்காத்தருள் (ஸகல)

அநுபல்லவி

புகலறியேன் கடல் சூழும்புவிமீது சிவனே (ஸகல)

சரணம்

நிதமு முலகு சதமென நினைந்து நெறிபிறழ்ந்து உழன்றேன்
சிதம்பரம் வளர் பொன்னம்பலவாண சிவகாமிரமண (ஸகல)

---

15. ராகம் காம்போதி—தாளம் ஆதி

பல்லவி

ஆடும் தெய்வம் நீ அருள்வாய் — இடதுபாதம் தூக்கி (ஆடும்)

அநுபல்லவி

நாடும் அடியர் பிறவித் துயரற
வீடுந் தருங் கருணை நிதியே நட (மாடும்)

சரணம்

சுபஞ்சேர் காளியுடனாடிப் படு
தோல்வியஞ்சித் திருச்செவியிலணிந்த மணித்

தோடு விழுந்ததாக மாயங் காட்டியும்
தொழும்பதமுயரத் தூக்கியும் — விரி
ப்ரபஞ்சம் முழுது மாட்டும் நின் றிருப்
பதந் தஞ்சமென வுனையடைந்தேன்
பரிந்தென் திண்டாட்டங் கண்டு பரிசு
தருந்துரையே ஸபைநடுவில் தத்திமி யென்று (ஆடும்)

---

16. ராகம் ஹேமவதி—தாளம் ஆதி

பல்லவி

சிதம்பரநாதா திருவருள்தாதா—நின்
சித்தமிரங்காதா * திருவடியலதொரு கதியிலன் (சிதம்பர)

அநுபல்லவி

பதஞ் ஜலியும் புலியும் பணியுங் குஞ்-
சிதபதனே ஸஞ்சித மகலாதா (சிதம்பர)

சரணம்

நன்று தீதுமறியேன் நொந்தேனே
ஞானமிலேன் உனைநம்பி வந்தேனே
மன்றிலாடும் மணியே செழுந்தேனே
வாதா அறுபகைத் தீயில் வெந்தேனே (சிதம்பர)

---

17. ராகம் சுத்த தந்யாஸி—தாளம் ஆதி (த்ரியஸ்ரம்)

பல்லவி

ஆனந்த நடமாடும் அய்யன் திருவடி பணிவோம் பர (மானந்த)

அநுபல்லவி

அனைத்துயிரிலும் வேற்றுமையற அகமும் புறமும் நிறைந்து பர (மானந்த)

சரணங்கள்

1. நோய் கவலையில் நொந்து வெம்பி அழியுமுடலுக் கழகேது
நாய் விரும்பி வெற்றெலும்பைக் கடிக்கும் அதுபோல் நாமுமழியாது பர (மாநந்த)

2. மண்டலமேல் நாம் கண்ட இன்பமெல்லாம் அநுபவிக்க மெய்வலிமை யுண்டோ
விண்டலந்தவழும்புலியைப்பிடிக்க மலையேறும் மடமைகொண்டோம் பர (மாநந்த)

ராம ஸ்துதி

18. ராகம் மாண்டு—தாளம் ஆதி

(ஸம்ஸ்க்ருதம்)

பல்லவி

ஸ்ரீராமபத்ர ஶ்ரிதஜந காருண்ய ஸமுத்ர (ஸ்ரீ)

சரணங்கள்

1. தஶரதபால தஶமுக கால
விஶால ஸரோருஹதள நயந (ஸ்ரீ)

2. ஸஜ்ஜந ஸுலப துர்ஜந துர்லப
ஜய ஜய ஜாநகி வல்லப (ஸ்ரீ)

க்ருஷ்ண ஸ்துதிகள்

19. பல்லவி

இனியொருகண முனே மறவேன் யதுகுலதிலக—நான் (இனி)

அநுபல்லவி

தனிப்பெருமைகொள் நீலமேகஶ்யாமளனே
* . . . . . . தாமரஸ தளாக்ஷனே நான் (இனி)

சரணம்

வறுமையும் பிணியும் மலிந்து மக்கள் மனை ஸம்ஸார பந்த முறினுமன்றி
மறுமையில் கொடும் நரகமுறினும் வான்பெறினும்
* . . . . ஆபத்பாந்தவனே நான் (இனி)

---

20. ராகம் பிலஹரி—தாளம் ஆதி (திவ்யநாமம்)

1. எந்தை கோவிந்தன் வந்தான் என்பெரும் ஆநந்தன் வந்தான்
நந்தகுமாரன் வந்தான் நவநீதசோரன் வந்தான்
2. நீரஜக் கண்ணன் வந்தான் நீலமுகில் வண்ணன் வந்தான்
ஆராவமுதன் வந்தான் அந்தமில் அச்சுதன் வந்தான்
3. கஞ்சன் உள்ளக் கொழுப்பும் எம்-கைகால்களின் விலங்கும்
வஞ்சப் பிறப்பும் அற வந்தான் முகுந்தன் வந்தான்

---

21. ராகம் கல்யாணி—தாளம் ஆதி

பல்லவி

புரக்கவே அவதரித்தான்
பொல்லா அஸுரரை ஸம்ஹரித்து ஸஜ்ஜநங்களைப் (புரக்க)

அநுபல்லவி

மரைக்கழல் புகலென்ற வரைத்துயர் தொடராமல்
சுரக்குமிரக்கமுடன் அரக்கரைக் கொன்று நம்மைப் (புரக்க)

சரணம்

ஸுரபதியுஞ் சிறந்த வரமுநிவருந் தெய்வத்
தரணியும் முறையிடப் பரிவுடனே
கருணைநிதி நமது திருக்குமரன் போலுயர்
பரமபத மிருந்து பரமபுருஷன் ஜகம் (புரக்க)

22. ராகம் கமாஸ்—தாளம் ஆதி

பல்லவி

கோபாலனே தெய்வமாம்—கோகுலம் வளர் (கோபால)

அநுபல்லவி

பாபஸம்ஹாரனும் ஆபத்ஸஹாயனும் (கோபால)

சரணம்

* ஸம்ஸாரமெனும் பேரலையாழியில்
தாழ்ந்திடாதருள் தயாகரனும்
கம்ஸாரி முராரி ஸ்ரீ நரஹரி
ஸநகாதி முநிவர் அமரரும் தொழும்பத (கோபால)

23. ராகம் முகாரி—தாளம் ஆதி

பல்லவி

எந்நாளும் இந்த பாக்யம் வேண்டுமே
ஹே கோபால- ஏழைக் (கெந்)

அநுபல்லவி

உன்னையே எனது நா பஜிக்க
உன் திருவடிகளையே கை பூஜிக்க (எந்)

சரணம்

கோடிக்கவலைகள் சூழினும்—மநம்
ஓடியலைந்து துயராழினும்—மிக
வாடியுடல் கைகால் கண்ணொது செய்யினும்
பாடியுனையே வழிபாடு செய்ய எனக்கு (எந்)

24. ராகம் ஸிம்ஹேந்த்ர மத்யமம்—தாளம் ஆதி

(ஸம்ஸ்க்ருதம்)

பல்லவி

ஸானந்தாந்தரங்க் ப்ருந்தாவந ஸஞ்சாரவிலோல

அநுபல்லவி

மந்த மந்தமிஹ ஸமீர: கம்பம்
க்ரீடிது மாயாஹி சபல (ஸாநந்த)

சரணம்

ஸங்க்ருஹாண ஸுகராம்ஸ்தே ஸுகராப்யாம்
ஶ்ருங்கார ரஸபராதி கபீர
பாஹி பாஹி நர ஶார்தூல-ஏஹி தூர்ணம் ஹே க்ருபாளோ (ஸாநந்த)

25. ராகம் மாண்டு—தாளம் ஆதி

(ஸம்ஸ்க்ருதம்)

பல்லவி

யமுநாதீரே லீலா மோஹந ஶரீர (யமுநா)

அநுபல்லவி

வேணு விலோல லீலாமோஹந ஶரீர (யமுநா)

சரணங்கள்

1. ப்ரேம வஶம்வத கோகுல மநோஜ்ஞ
ப்ராணகாந்த பாஹி லீலா மோஹந ஶரீர (யமுநா)

2. கோவர்தநகிரிதர ஜகதீஶ
ஜயகோபால லீலாமோஹந ஶரீர (யமுநா)

ஸ்ரீரங்க ஸ்துதி

26. ராகம் ஸஹாந—தாளம் ஆதி

பல்லவி

கதி நீயே நாயேனுன் அடிமை அய்யா என்னைக்
கைதூக்கி ஆளல் உன் கடமை அய்யா

அநுபல்லவி

நதியிற்சிறந்த தெய்வ நதியாம் காவிரி ரண்டின்
நடுவில் திருவரங்கப் பதிவாழ் நாரண என்றன்

(சிட்டாஸ்வரம்)

நிஸரீ ரிக ரிகம ரிகமபம பமரீ பமகமரி கரிஸ நிரி
ஸரிகமபம தபமகமரிபமபா ரிரீநீதப நிதபம ககமரிஸ
ஸஸா பபா மமா ததா நிஸ் நநித பாதபதபம தநிஸ்நிஸா
ரீக்ம்ப்ரிப்ம் க்ம்ரிக்ரிஸ்நிஸ் ரிகமபதநீத பமகமரிகரிஸ (கதி)

சரணம்

கொடுமை கர்பவாஸமும் நரகமுமே—மிகக்
கொடுமை நாளைவரும் மரணபயமே
இடையில் இடிகரையின் வாழ்வோ பயங்கரமே
எதற்கென்றஞ்சி அழுவேன் அரங்கா மநமிரங்காய் (கதி)

பாண்டுரங்க ஸ்துதிகள்

27. ராகம் பிஹாக்—தாளம் ஆதி

ப. பாகவதோத்தம ஜே துகாராம்
பரமபவித்ர ஜே துகாராம் (பாகவ)

அ. பாண்டுரங்கப்ரிய ஜே துகாராம்
பக்தஶிரோமணி ஜே துகாராம் (பாகவ)

ச. ஸங்கரஹித பாண்டு ரங்கபஜநரத
துங்கமுறு புகழ் அபங்காசார்ய (பாகவ)

---

28. ராகம் ஸமதா—தாளம் ரூபகம்

பல்லவி

போவோம் வாரீர்

அநுபல்லவி

பண்டரிநாதன் ஸந்நிதிக்கே நாம் (போவோம்)

சரணம்

சரணகமலம் பணியுமவர்க்கு
பவஸாகரத்தாழும்
இடையளவென்றிருகரம் வைத்
திளநகையுடன் அருள்பவனிடம் (போவோம்)

---

29. ராகம் பிலஹரி—தாளம் ரூபகம்

பல்லவி

ஜய விட்டல ஜய விட்டல ஜயஜயரக்ருமாயீ (ஜய)

அநுபல்லவி

தயாஸமுத்ர தேவகிபுத்ர
ஸரோஜநேத்ர பரமபவித்ர (ஜய)

சரணம்

* பாதகமலம் பணியுமன்பர் பவநாஶநனே
மாதவனே கேஶவனே மாரமண ஶ்ரீதரனே (ஜய)

---

30. ராகம் ஹம்ஸநாதம்—தாளம் ஆதி

பல்லவி

நீயே பராமுகமாயின் ஜகந்தனில்
நாயேன் கதி ஏதய்யா-பாண்டு ரங்க (நீயே)

அநுபல்லவி

தாயே மகவை மறந்தாலென்ன செய்வது
ஶரணம் ஶரணமெனக் கருதும் அடிமையிடம் (நீயே)

சரணம்

பாரில் பிறந்த உயிர்க் கெல்லாம் சிறந்த உயர்
பகுத்தறிவுள்ள நரஜந்மந் தந்தாய்—இதிலும்
தீராக் கவலை ஸம்ஸாரவிலங்கை மாட்டித்
திகைக்கச் செய்தாய் எனக்குத் தாயுந் தந்தையுமான (நீயே)

---

31. ராகம் குந்தளவராளி—தாளம் ஆதி

பல்லவி

கருணாநிதியே கடைக்கண் பாராய்
கமலாபதியே அருளித்ததியே (கருணா)

அநுபல்லவி

பரமாத்மா நீயே பண்டரிநாத
பாபஸம்ஹார பாண்டுரங்க (கருணை)

சரணம்

* தேவகி ஸ்ரீ வஸுதேவ குமாரனே
ஸ்ரீதர ருக்மிணிதேவி மனோஹர
தேவர்கள் வெந்துயர் தீர்த்திடும் விட்டல
தீநதயாபர எங்களையாண்டருள் ஸ்ரீ (கருணை)

---

32. ராகம் ஸோஹினி—தாளம் ஆதி (கண்ணிகள்)

1. ஜே பண்டரீஶ ஜே பாண்டுரங்க
ஜய ஜயப்ருந்தா வந ஸஞ்சார

THE MADURA TAMIL SANGAM

2. ஜயகோபால ஶ்ரிதஜநபால
ஜய வந மாலா தர ஶ்ரீலோல

3. ஸரஸிஜநேத்ர ஶ்யாமளகாத்ர
பரமபவித்ர வஸுதேவபுத்ர

---

33. ராகம் ஹிந்துஸ்தாந் காப்பி—தாளம் ஆதி

பல்லவி

பாண்டுரங்கப்ரபுவே—உன்றன்

அநுபல்லவி

பாதமேகதி யென்றெப் போதும் நம்பினேம் ஜய (பாண்டு)

சரணம்

நீண்டபவக் கடலைத் தாண்டியுன் அருள்பெற
வேண்டும் சிறுவன் என்னை ஆண்டருள் அய்யனே (பாண்டு)

---

34. ராகம் சக்ரவாகம்—தாளம் ஆதி

பல்லவி

ரங்கனைத் துதிப்போர்க் கிடரேது—அந்த
ரங்கபக்தியுடன் * இரவும் பகலும் மறவாது பாண்டு (ரங்க)

அநுபல்லவி

மங்களமே தருவான்—ஸகல ஜகந்
மண்டலமும் உயர் விண்டலரும் பணி
முண்டக பாதனை பண்டரி நாதனை (ரங்க)

சரணம்

தந்தையைப்போல் பொருளெல்லாந் தருவான்
தாயெனப் பரிந்தெடுத் தணைக்கவும் வருவான்
சிந்தைகலங்கிக் கதறும் கஜராஜன்
* செப்பிய மெய் ப்ரணவப் பொருளாயொளிர்
சக்ராயுதனாய் வந்தாண்ட பாண்டு (ரங்க)

ஸ்ரீ விஷ்ணு ஸ்துதிகள்

35. ராகம் நாதநாமக்ரிய—தாளம் ரூபகம்

1. ஸர்வலோக ஶரண்ய ஸ்ரீ ஷாட்குண்ய பரிபூர்ண
ஸர்வஜீவ காருண்ய ஸஜ்ஜநமுநிகண புண்ய

2. க்ஷீரஸாகரவிஹார தீநநாத ஶ்ரிதமந்தார
தாரணிதர்மந்தழைக்கவே அவதரித்த திவ்ய தஶாவதார

3. நீயே என்றன் அன்னை தந்தை நீயே என்தநம் ஜீவன்யாவும்
நின்னருளே என்பேரின்பம் இல்லையேல் எனக்கெல்லாம்துன்பம்

---

36. ராகம் பைரவி—தாளம் ஆதி

பல்லவி

அத்தருண மபயங்கொடுத்தாண்டருள் -
வாயென்னம்மையப்பா

அநுபல்லவி

பக்தபரிபாலகனே—பரந்தாமனே
பாற்கடலில் பள்ளிகொண்ட பத்மநாபனே இரங்கி (அத்)

சிட்டாஸ்வரம்

ஸ்ாநிதப மகமநிதபமகரிஸ | ரீநிஸ கரிக மபரிகமபதநி
ஸ்ாரிக்ம் ரிக்ஸ்ரிநிஸ் பதமப | க்ாரிஸ்நி ரிஸ்ஸ்நித பமபதநி

சரணம்

உத்தமப் பிறவி அளித்தாய்—ஊனமில்லாத
உடலும் அறிவும் கொடுத்தாய்— என்-
னத்தனையும் நன்றியில்லேனே—பரந்த அருள்
அத்தனையும் நான் மறந்தேனே -
பக்தியுமில்லையே சித்த சுத்தியுமில்லாக் கொடிய
பாவியானாலும் உடல்விட்டாவி பிரியத்துடிக்கும் (அத்)

37. ராகம் ஹமீர்கல்யாணி—தாளம் ஆதி

திருமடந்தை பூமாதும் பொருந்தும் மருங்கும்
அரவரசன் அணைசேர் அமல விமல
அமரபரிபால தேவாதிதேவ வாஸுதேவ
ஜய ஜய தயாநிதி வைகுண்ட—வாஸேஶ்வரனே
மதந ஜநக எமைக் கருணைசெய்து
காத்தருள் புரிகவே
மங்களந் தருகவே

---

38. ராகம் ரீதிகௌள—தாளம் ஆதி (திவ்யநாமம்)

பல்லவி

பேராநந்தங்காண் ஹரிபஜநம் (பேரா)

அநுபல்லவி

ஆராவமுதனை பஜித்தால்
ஆதிவ்யாதிகள் தீரும்—பாரினில் (பேரா)

சரணங்கள்

1. நாரதர்முதல் முநிவோரும்—ஸந
காதியரும் எந்நேரமும் துதிக்கும் (பேரா)

2. அஷ்டஸித்தியுங்கைகூடும்—எந்த
இஷ்டஸித்தியுந் தரும் திவ்யநாமமே (பேரா)

லக்ஷ்மி ஸ்துதி

39. ராகம் அடாணா—தாளம் ஆதி

பல்லவி

நீ இரங்காயெனில் புகலேது அம்ப
நிகில ஜகந்நாதன் மார்பிலுறை திரு (நீ)

அநுபல்லவி

தாயிரங்காவிடில் சேயுயிர் வாழுமோ
ஸகல வுலகிற்கும் நீ தாயல்லவோ அம்ப (நீ)

சரணம்

பாற்கடலிலுதித்த திருமணியே—ஸௌ -
பாக்யலக்ஷ்மி என்னைக் கடைக்கணியே
நாற்கவியும் பொழியும் புலவோர்க்கும் மெய்ஞ்
ஞானியர்க்கும் உயர் வானவர்க்கும் அம்ப (நீ)

பொதுப் பாட்டுக்கள்

40. ராகம் மணிரங்கு—தாளம் ஆதி

பல்லவி

கடலிலமிழ்ந்திடுவோம்—கருணைக்
கடல் கடவுள் அடிபணிந்து தடங் கருணைக் (கடலில்)

அநுபல்லவி

உடல் படைத்தோமே ஊனமில் மாநிட
உடலினி வருமோ பெரும் ஆநந்தக் (கடலில்)

சரணம்

பாவபுண்ய மறிந்து நன்னெறிசெலப்
பகுத்தறிவளித்த பரமனே பதித
பாவநனே புவநபதியே என்றும்
பாடியாடி ஒன்றுகூடி ப்ரஹ்மாநந்தக் (கடலில்)

---

41. ராகம் ஹிந்தோளம்—தாளம் ரூபகம்

பல்லவி

மாரமணன் உ மாரமணன்
மலரடிபணி மநமேதிநமே

அநுபல்லவி

மாரஜநகன் கு மாரஜநகன்
* மலைமேலுறைபவன் பாற்கடல்
அலைமேல் துயில்பவன் பாவந

(சிட்டா ஸ்வரம்)

மாநிதமக தமக ஸநித
மாதமநித ஸநிகஸமக
மாகஸநிஸ தநிஸா க ஸ
மாகமதநி தமகஸமக
மாதநிதத நிதமக மத
மாநி நிதத நிகமதநிஸ்
ம்ா க் ஸ்ம்க் ம்க்ஸ் நிநிஸ்
ம்ா க் ஸ் நித மாகஸநிஸ (மா)

சரணம்

* ஆயிரம் பெயராலழைப்பினும்
ஆயிரம் உரு மாறினும் உயர்
தாயின் மிருத யாகரன் பதம்
தஞ்சமென்பவரை அஞ்சலென்றருளும் (மா)

42. ராகம் கரஹரப்ரிய—தாளம் ஆதி

பல்லவி

வீணே அழியாதே—பேரின்ப

அநுபல்லவி

வீடுபெற எளியவழி இது நண்பா (வீணே)

சரணங்கள்

1. ஊனுடல் வாழ்வு உயிர்க்கெல்லாம் சொந்தம்
உயர்வு தாழ்வு முதலாம்ப்ரதி பந்தம்
உனக்கேன் உன் வினைப்பிறவி அநந்தம்
உன்னை நீ உணர்ந்துபார் தீரும் பந்தம் (வீணே)

2. வஞ்ச ஐம்பாதகம் விளைக்கும் வித்து
மாயப்பொருளாசை ஓர் பெரும் பித்து
மானமழிக்கும் நிதமும் ஆபத்து
மாநிலமேல் பெண்களாசை பிடித்து (வீணே)

3. சினமாங்காரம் காமத்தைக் கொல்லு
திருவருள் வழியை அடைக்கும் கல்லு
மநமடங்கும் ஸந்நிதியிலே நில்லு
வாய்மணக்கும் அய்யன் பெயரை நீ சொல்லு (வீணை)

---

43. ராகம் பிஹாக்—தாளம் ஆதி

பல்லவி

ஸாரஸப் பூம்பாதம் பணிவோம் ஸம்
ஸாரவெந்தாபந்தான் தணிவோமே (ஸாரஸ)

அநுபல்லவி

நீரஸ விஷய விஷந்தனையுண்டு
* நிலையிலாத உலக இன்பமே பெரி
தென்று நினைந்து அழிந்தது போதுமே

சிட்டா ஸ்வரம்

ஸ்ரிஸ்நிதபாம கமபம கமகரி
நிஸகமபா கம பநிதநிஸா-நி
ஸ்க்ரிம்க்ரிஸ்நி ரிஸ்நிஸ்நிதபம
நிரிநிதபா—ம கம கம பா—நி (ஸாரஸ)

சரணம்

* அங்குமிங்கு மெங்குமே நிறைந்தவன்
அன்பிலார்க்கு இல்லாது மறைந்தவன்
அகில வுலகுயிரும் படைத்தளித்தழிப்பவன்
அனைத்துயிர்க்கும் அனைதந்தையாய்த்தழைப்பவன்

அருளே வடிவாய் அடியார் உள்ளமே
திருமாளிகையாய் அகலா துறைவன்
ஒரு பேரிலன் ஆ யிரம் பேருடையான்
கருவாதனை தீ ர அருள் இறைவன் (ஸாரஸ)

44. ராகம் ஸிந்துபைரவி—தாளம் ஆதி (தரிபத்)

பல்லவி

ஓகோ என் தோழர்காள்—என்
ஆருயிர் ஸஹோதரர்காள்
உத்தமப் பிறப்படைந்தோம்
ஹரன் ஹரிகுணம் பாடுவோமே (ஓகோ)

அநுபல்லவி

லோகவாழ்வு மின்னல் போன்றதன்றோ
உள்ளபோதே இன்பத்தைத்தேடுவோமே
ஓடியாடும் பம்பரம்போல் ஓய்ந்து
உலகிலிருந்து மறையும் நாள் என்றோ (ஓகோ)

சரணம்

யாரே துணை இறைவனன்றி
ஏமனைத்தடைசெய்ய மருந்துண்டோ

இடைவழிவந்த மக்கள் மனை ஸொந்தம்
இலேயே மனம்வருந்தச்செய்யும் பந்தம்
என்றும் உங்கள் ராமதாஸன்
இனியதும் எளியதும் இப்பாடல்
இரவும் பகலும் நினைந்து பாடி
இரும்பவக்கடல் தாண்ட வாரீர் (ஓகோ)

---

45. ராகம் பிஹாக்—தாளம் ஆதி

பல்லவி

எல்லாம் ப்ரஹ்மமயம்—உலகில் (எல்லாம்)

அநுபல்லவி

ப்ரஹ்மமயம் பரப்ரஹ்மமயம்
ஹரிஹரன் பிரமன் முருகனுெடருகன் (எல்லாம்)

சரணங்கள்

1. ஏசு-நாதன் புத்தன் சக்தி
ஸகலமதமும் ஜாதி ஸமயமும் ஈயெறும்பும்
வேதியன் பறையன் பணக்காரன் ஏழையும் உலகில் (எல்லாம்)

2. அகங்-காரம் க்ரோதம்-மடமை ஸ்வயநலம்
இரக்கமில்லாமை
யாவும் மிகுந்தமனிதர் வேற்றுமைகொண்டு தமக்குள்
இன்பமறியாமல் வெறுந் துன்பமநுபவிக்கின்றார் (எல்லாம்)

ஸ்ரீ அந்நி பெஸன்ட் அம்மையாரின் பெருமை

46. ராகம் வஸந்த—தாளம் ஆதி

பல்லவி

தேவி வஸந்தே-
ஜய ஜய போற்றிநின் திருவருள் போற்றிமெய்த் (தேவி)

அநுபல்லவி

நாவினரசி சலியாதுழைப்பவளெனப்
* பூவுலகமுழுதும் புகழ்க்கொடி நாட்டிய
பூமியரசர் கொண்டாட மெய் காட்டிய (தேவி)

சரணங்கள்

1. நானென தெனுமஹங்காரம் முதலொழிந்திந்
நாட்டில் வறியர் எளியர் கடையருடன்வந்து
ஞானஸமரஸ ஸன்மார்க்க நெறிபுகுந்து
ஞாலஸம்மதமொருமதமெனச்சொல வந்த (தேவி)

2. உண்மை யுணர்வு இலராய் நிழல்தனைக் கட-
வுள்ளெனமயங்கிப் பொறாமை பயம் மிகுந்து
நுண்மதியிழந்து கலாஞ்செயுமவர்க்குயர்
நூல்களின் பொருள்தனைத் தெள்ளென விளக்கிய (தேவி)

3. ஊனுடல் மறைந்தும் பரந்த உலகிலொரு-
ஊர்தவறாது முழங்கு புகழ்கொளும்

ஞானஒளி வடிவொடுயர் நெறியும் சாந்தம்
நல்குகொள்கையும் பல்லாண்டு செழிக்க எங்கள் (தேவி)

தேசிய கீதங்கள்

47. ராகம் கமாஸ்—தாளம் ஆதி (மருவேசெறித்த)

புவிமாமடந்தை முடிமீதணிந்தொ-
ளிர்கிரீடமென்று புகல்வோமே
புகழ்மேவுசந்த்ர முகமீதிடுந்தி-
லகமேஇதென்று புகழ்வோமே
நவதானியங்கள் தனராசி தங்கம்
முதலாய ஐந்தும் விளைவாகி
நரகோடிமண்டு பசிதீரவுண்டும்
நிதமேவளர்ந்து நிதியாகி

சுவையாலடைந்த பரதேஸ சண்ட
படையாம் விருந்தை நகையோடின்
சொலொடாடையுண்டி பரிவோடுதந்து
களிகூரும் நங்கள் திருநாடு
தவநாடுதுங்க மலைநாடநந்த
நதிபாயுமிந்த்ய அருள்நாடு
தயைதாநமன்பு நிறைநாடுமிஞ்சு
வளநாடிதெங்கு மிலையீடு

---

48. ராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி

பல்லவி

அன்னையின் காலில் விலங்குகளோ - நாம்
அந்தோ அறிவில் விலங்குகளோ - நம (கண்ணே)

அநுபல்லவி

உந்நத இமயமலை எல்லையுடன் முப்பத்து-
முக்கோடி மக்களையும் ஈன்றநம் பாரத (அன்னை)

சரணங்கள்

1. நான்மறைகள் ஆகமபுராணமுடன் ஆறுபத்து
நான்குகலை சாஸ்திரங்கள் ஆயிரந் தந்தாள்-உயர்
வான்நதி கங்கை யமுனை காவிரி கோதாவரியும்
காசியும் நினைக்க மநந்துடிக்குதையோ - நம (தன்னை)

2. தங்கமும் வெள்ளியும் நவரத்திநங்களும் விளையும்
துங்கவளநாடு புவியெங்குமில்லையே - நவ
தாநியம் விளைந்தும் பசியால்மடியும் மக்கள் நம்மைப்
போலுலகிலில்லை நெஞ்சில் வெட்கமில்லையே - பாரத (அன்னை)

3. ஸௌரியகுலம் உயர்ந்த ஆரியகுலமென்றில்லா
வீரியம்பேசுவோம் ஒரு காரியமில்லை - திநம்

வீர அபிமந்யு கதை பீமன் விஜயன் கதைகள்
விடியவிடியக் கேட்போம் ரோஷமுமில்லை - பாரத (அன்னை)

---

49. ராகம் பீம்ப்ளாஸ்—தாளம் ரூபகம்

பல்லவி

வான இன்பமும் பெரிதோ - தேசபக்தியிலுமினிதோ (வான)

சரணங்கள்

1. தீநஜநங்கள் வருத்தங்கண்டு
செய்துபார் அவர்க்குத் தொண்டு
தெய்வமருளும் மகிழ்வு கொண்டு
ஜந்மமெடுத்த பயனும் உண்டு (வான)

2. வெள்ளக்கொடுமை நோய்கள் வறுமை
வேற்றரசின்கீழ் வாழுஞ் சிறுமை

கொள்ளையர்க்கும் நாம் வணங்கும் மடமை
குழந்தை சிரிக்க மறந்தோம் கடமை (வான)

3. ஏழைகள் அழும் பொழுது ஸாந்தம்
எங்கிருந்து வரும் வேதாந்தம்
கோழைத்தனம் துர்குணம் மதாந்தம்
குழவிநாட்டைக் கொல்லும் மாந்தம் (வான)

---

50. ராகம் நடபைரவி—தாளம் ஆதி

பல்லவி

பாரத மாதா

அநுபல்லவி

* பரிபூர்ணஸ்வதந்திர மெய்துவளோ (பாரத)

சரணங்கள்

1. ஆரணமாகமம் ஆதிகலைக்கடல்
ஆழமளந்தமெய்ஞ்
* ஞானியர் மாமுனிவோரையு மீன்ற நம் (பாரத)

2. ஜாதிமதங்கள் அநந்தமுண்டாயினும்
தாயின் விலங்கினைத்
* தகர்த்தெறியவொரு மநத்தொடெழுவரோ (பாரத)

3. வீட்டினுள் வந்தோர் எந் நாட்டவரேனும் பா-
லூட்டித் தாலாட்டிச் சீ-
* ராட்டி வளர்க்கு மிரக்க மிகுந்த நம் (பாரத)

விருத்தம்

வண்டார்குழல் மாதுமையாள் பூங்
கரத்தால் வருடுந்திருப்பாதம்
தொண்டர் பணிக்குப் பரவைமனை
தூது நடந்த திருப்பாதம்
விண்ட அடியர்க்குளங் கனிந்து
பரிந்து வீடுதரும் பாதம்
கொண்ட நடனத் திருப்பாதம்
கொண்டென் மனத்திலுய்ந்தேனே

மங்களம்

N. B. * இக் குறியுள்ள அடிகளெல்லாம் மத்யம காலத்தில் பாடப்படவேண்டும்.

6926 -3
6926